திரு. சோ. அழகர்சாமி: அமைச்சர் அவர்கள், விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரிசீலனையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அங்கு பஸ்விட ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது? அந்த வழித் தடத்தில் தனியார் பஸ்ஸோ அல்லது அரசாங்க பஸ்ஸோ விட உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எல்லா வண்டிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்தும் விண்ணப்பங்கள் தரப் பட்டிருக்கின்றன. பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

Nagercoil-Keezhkulam Pidakai bus service.

* 60. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state whether there is any proposed under consideration to resume the 9-C route bus service between Nagercoil and Keezhkulam Pidakai in Kanyakumari district?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேருந்துகள் பற்றுக்குறை காரணமாக நாகர்கோயிலுக்கும் கீழ்குளம் பிடாகைக்கு மிடையிலான 9-சி வழித்தடத்தில் 1—4—1975-லிருந்து பேருந்து விடப்படுவதில்லை. தற்போது நெரிசல் நேரப் போக்குவரத்துப் பணிக்குரியதாக இவ்வழித்தடம் மாற்றப்பட்டு பேருந்துகள் முறையாக விடப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ்: இது ஒரு முக்கியமான பஸ் ரூட். அடிக்கடி இங்கு பஸ் சர்வீஸ் நிறுத்தப்படுகிறது. அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக அங்கு பஸ் சர்வீஸ் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது நிரந்தரமாக பஸ் போய் வந்து கொண்டிருக்கிறது. பொதுமக்கள் தேவையைச் சிந்தித்து 341 ஆம் எண் வழித்தடம் பேருந்துப் பணி போதுமானது என்று அரசு கருதுகிறது.